வேண்டும்.

சுவடிகள் நிறுவனங்கள் புராதன கிரேக்க நாகரிகங்களுடன் தோற்றம் பெற்றது எனலாம். கி. மு. 5, 4 ஆம் நூற்றாண்டுகளில் ஏதேன்ஸ் மக்கள் மிக முக்கியமான ஆவணங்களை கோயில்களில் இறைத்தாயிடம் வைத்து பாதுகாத்தார்கள் என்பதுடன் கையெழுத்துப்பிரதிகளும் ஆவணங்களும் பைப்பிரஸ் சுருள்களாகவும் பேணப்பட்டது. மேலும் இலக்கியங்களையும் அரசு வளர்ச்சிகளையும் மக்கள் வரலாறுகளையும் அறியக்கூடியதாக இருக்கிறதெனில் அதற்கான காரணம் அப் பேணுகையின் அவசியம் அங்கே காணப்பட்டிருக்கிறது என்பதே.

என்ன காரணத்திற்காக பதிவேடுகளை பேணவேண்டும் என்பது முக்கியமானதாகிறது. அரச முக்கியத்துவத்தினை நடைமுறைத் தேவையில் அபிவிருத்தி செய்தல், இரண்டாவதாக கலாசார முக்கியத்துவத்திற்காக கலாசார மூலங்களில் ஒன்றானது இச் சுவடிகள். இவை புத்தகங்கள், கையெழுத்துப்பிரதிகள், அரிய பொக்கிஷங்களாக இருக்கலாம். பொது மக்களின் சொத்தாக ஆவ்ணங்களாக கருதப்படுகிறது.

மூன்றாவதாக இவை தனிப்பட்ட விருப்பங்களில் ஒன்றானது. பிரான்ஸ் மறுமலர்ச்சியாளர்களுக்கும் இந்தக் காரணமே சுவடிகள் நிறுவனத்தை நிறுவ உந்தியது. சமூக பொருளாதார அரசியல் உறவு முறைகளும்

**வாரத்தை கொண்டாடுகிறது)**

மீளாய்வாண்டுக் காலப்பகுதியில் விசேட ஜனாதிபதிக்குழுவின் பதிவேடுகளை உள்ளடக்குவதற்காக 1973 ஆம் ஆண்டின், 48 ஆம் இலக்க தேசிய சுவடிக் கூடச் சட்டத்தின் பகுதி 2 இல் சில மாற்றங்கள் சட்டவரைஞர் திணைக்களத்தினால் கொண்டுவரப்பட்டது. அதோடு தனியார் நிறுவனங்களின் கேட்டல் காண்டல் பதிவேடுகளையும் சேர்ப்பதற்கு வேண்டிய விதிகளின் இறுதிவரைவும் தயாரிக்கப்பட்டது.

அரசுப் பதிவேடுகளை நிரந்தரமாய் பாதுகாத்து வைத்ததற்காக சேர்த்துக் கொள்ளல், அவற்றின் பேணுகை, ஆராய்ச்சியும் வெளியீடும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பதிவேடுகளை கிடைக்குமாறு செய்தல், நாட்டில் சகல அச்சிடப்பட்ட விடயங்களுக்குமான பிரதான சட்டரீதியான வைப்பகமாக சேவையாற்றுதல், தனியார் வசமுள்ள சாதனங்களின் அளவைகளை மேற்கொள்ளல் என்பன இத் திணைக்களத்தின் பிரதான நோக்கங்களாக அமைகிறது.

இச்சுவடிகள் கூடத் திணைக்களம் நூற்றுக்கணக்கான பதிவேட்டுத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. செய்தித்தாள்கள் வெளியீடுகளைக் கொண்டுள்ளதுடன் முதலாந்தொகுதி 1640 - 1796 வரையிலான ஒன்றான உதயதாரகை (Morning) Star ஐ எடுத்துக் கொண்டால் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்த இப்பத்திரிகை ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் சமூகத்தில் நிலவிய சமூக பொருளாதார முரண்பாட்டு நிலைகளையும், அக்காலத்தில் சமூக, சமய, பொருளாதார அரசியல் நடை முறைகள் அப்பத்திரிகைகளில் விவரமாக அறியக் கூடியதாகவுள்ளது. இலங்கை வடதேசம், பிரதேசம் சமாசாரத்திரட்டு இவ்வாறான சில தலையங்கங்களின் கீழ் ஆரம்பகாலங்களில் வெளியான விடயங்கள் சாதாரண செய்தியாக மட்டுமன்றி வரலாற்று ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

பத்திரிகைகளின் பகுதிகள் ஆராய்ச்சியாளர்களுக்கு தேவைப்படுமிடத்து பத்திரிகையின் பௌதிக நிலையை/ தேவையைப் பொறுத்து போட்டோ பிரதியாகவோ அல்லது நுணுக்கொளிப்படத்தின் மூலமோ வழங்கப்படுகிறது.

பதிப்பாளர் வெளியீட்டாளர் சட்டத்தின்படி வெளிவரும் வெளியீடுகள் தேசிய சுவடிகள் கூடத்தில் பேணப்பட்டு வருகிறது. இவை சட்டரீதியான வைப்புகளாக இருப்பதினால் இவை தேடுகைக்கு வழங்கப்படுவதில்லை. ஆயினும் ஒரு ஆராய்ச்சியாளருக்கு வேறெந்த நூலகத்திலும் குறிப்பிட்ட வெளியீடு கிடைக்காத போது விசேட அனுமதியுடன் வழங்கும் வசதி உண்டு.

virkesari 23/10/92

நளாயினி கணபதிப்பிள்ளை